பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 09 2026 FRIDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறு தொழில்கள் முக்கிய பங்கு வகித்து வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
- மத்திய அரசின் திட்டங்கள் மூலம் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- அந்நிய முதலீடுகளால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தால், அதனை வரவேற்பதாக தேமுதிக தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் நிலவிவரும் மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு அடிப்படை பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வுகாணப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.
- ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டியில் 127 ரன் வித்தியாசத்தில், இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

----------

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறு தொழில்கள் முக்கிய பங்கு வகித்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

புது தில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமரின் முத்ரா திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

கடந்த 2015-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், சிறு தொழில்முனைவோர்கள் பிணையில்லா வங்கிக் கடன் பெறுவதற்கு வழிவகுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தியதன் மூலம், பயனாளிகள் கூடுதல் கடனுதவிகளைப் பெறுவதற்கும், அதற்கான தகுதி நிலையை வலுப்படுத்துவதற்கும், வங்கிகளிடம் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கும் உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமிருந்து 200-க்கும் மேற்பட்ட முத்ரா திட்டப் பயனாளிகள் இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

----------

யுபிஐ பரிவர்த்தனைகளுக்கான கட்டண விகிதம், வெளிநாடுகளின் அழுத்தத்தின் காரணமாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதிச் சேவைகள் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தக் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்றும், அடிப்படை ஆதாரமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு பரிவர்த்தனைகளில், நாட்டின் நிதிசார் கட்டமைப்பை பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகவே, இந்த கட்டண விகித அறிவிப்பு அமைந்துள்ளது என்று அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பணப் பரிவர்த்தனைகளுக்கு வலுவான மாற்றுமுறைகளாக ரூபே, டெபிட், கிரெடிட் அட்டைகளின் பயன்பாட்டை அரசு மக்களிடையே ஊக்குவித்து வருவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அதிக மதிப்பிலான குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு, கட்டண விகிதம் சிறு நிறுவனங்கள் யுபிஐ பரிவர்த்தனைகளில் கூடுதல் சந்தை வாய்ப்புகளைப் பெறுவதற்கு வழ வகுக்கும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

----------

ஏழைகளின் நலனை கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டு பொது வாழ்க்கையை போற்றும் வகையில், சென்னையில் உள்ள தூர்தர்ஷன் தொலைக்காட்சி வளாகத்தில் நடைபெற்ற ஆசிர்வாத தீபம் சிறப்பு நிகழ்ச்சியில் அவர் சிறப்பு விருந்தினாராக பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த 12 ஆண்டுகளில், மத்திய அரசு செயல்படுத்தியுள்ள எண்ணற்ற திட்டங்களை பட்டியலிட்டார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜெ அப்துல்கலாமின் கனவை நனவாக்கும் வகையில், வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதற்கான திட்டங்களை பிரதமர் முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

----------

உலகின் மிக விரைவாக வளர்ந்து வரும் முக்கியப் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என்று அமெரிக்காவிற்கான இந்தியத் தூதர் திரு வினய் மோகன் குவாட்ரா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி நுகர்வில் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்திப் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலிவு விலை, சந்தை நிலவரங்கள் மற்றும் வணிக ரீதியான சாத்தியக்கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில், இந்தியாவின் எரிபொருளுக்கான கொள்முதல் முடிவுகள் மேற்கொள்ளப்படுவதாக திரு வினய் மோகன் குவாட்ரா கூறியுள்ளார்.

----------

அந்நிய முதலீடுகளால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தால், அதனை தேமுதிக வரவேற்கும் என்று அக்கட்சியின் பொது செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த பூந்தமல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில் முதலீடுக்ள மூலம் மாநிலம் பயனடைய வேண்டும் என்பதே தங்களது கோரிக்கையாக உள்ளது என்று தெரிவித்தார்.

தேர்தலின்போது, வேட்பாளர்கள் தவறான தகவல்கள் அளித்திருந்தால், அது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருமதி. பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

-----------

தமிழகத்தில் நிலவிவரும் மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு அடிப்படை பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வுகாணப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

திருவாரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சட்டத்திற்கு உட்பட்டு, ஜனநாயக ரீதியில், கருத்து தெரிவிக்க மாநில அரசு அனுமதிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

வலைதளங்களில் கன்னியமற்ற வார்த்தைகளை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தினார்.

-----------

நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று முதல் நான்கு தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டல சுழற்சி காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், வட தமிழகம் உள்ளிட்ட ஏனைய பகுதிகளில், ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

நெல்லை பாளையங்கோட்டைப் பகுதியில் பலத்த சூறாவளிக் காற்றுடன் நேற்று மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில், நேற்று பெய்த மழை காரணமாக மரங்கள் வேறுடன் சாய்ந்ததால், போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-----------

நியூயார்க்கில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஐ நா பொதுச்சபை உயர்நிலைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, ஈரான் அதிபர், வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட அந்நாட்டின் உயர் அதிகாரிகளுக்கு அமெரிக்கா விசா வழங்கியுள்ளது.

-----------

*நைஜீரியாவில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நச்சுத்தன்மையுள்ள பானத்தை அருந்தியதில் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.*

-----------

*பிரேசில் நாட்டில் அதிபர் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், முக்கிய நலத்திட்டத்தின் பயன்களை 15 சதவீத அளவிற்கு அதிகரிப்பதற்கான அரசாணையில் அந்நாட்டு அதிபர் திரு லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா கையெழுத்திட்டுள்ளார்.*

-----------

*மேற்குவங்க சட்டப்பேரவை இடைத்தேர்தலில், கட்சிப் பெயரையோ அல்லது சின்னத்தையோ பயன்படுத்த வேண்டாம் என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் இரு பிரிவுகளுக்கும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.*

-----------

*ருத்தியமைக்கப்பட்டுள்ள பாஸ்போர்ட் விதிமுறைகளை வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.*

-----------

*பெரம்பலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டைகளில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் ஆதார் விவரங்களை உறுதி செய்யும் வகையில், கைரேகை, கண் கருவிழி பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*-செல்வராஜ்*

*நீலகிரி மாவட்டத்தில் ஸ்டாபெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 32 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.*

-----------

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்தரமேரூர் சட்டப்பேரவை தொகுதியில் 2 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு. தென்னரசு தொடங்கி வைத்தார்.*

-----------

*கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கிராமப்புற வாழ்வாதரத்தை மேம்படுத்தும் வகையில் 50 சதவீதம் மானிய தொகையுடன் கூடிய நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி. பத்மஜா தெரிவித்துள்ளர்.*

-----------

*சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெற உள்ள தாராபுரத்தில், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நடத்திய வாகன தணிக்கையின் போது, ஒரு கோடியே 40 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.*

-----------

*ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டியில் 127 ரன் வித்தியாசத்தில், இந்தியா வெற்றி பெற்றுள்ளது.*

*புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 221 ரன் எடுத்தது.*

*இதனையடுத்து, 222 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஆப்கானிஸ்தான் 14 புள்ளி ஒரு ஓவரில் 94 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், இந்தியா மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.*

-----------

*ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிர் டுவென்டி-டுவென்டி கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.*

<<<<>>>>